# பிரதமரைப் பதற வைத்த “பப்பு!”

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து நடைபெற்ற முதல் கூட்டத் தொடர் குடியரசுத் தலைவர் உரையோடு தொடங்கி முடிந்துள்ளது! இந்தக் கூட்டத் தொடரில் நடந்துள்ள விவாதம் குடியரசுத் தலைவரின் உரை மீதான விவாதமாக இல்லாமல், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் உரையின் மீதான விவாதமாக அமைந்துவிட்டது என்பது கண்கூடு! பிரதமர் மோடி யாரை கடந்த காலங்களில் 'பப்பு' என்று எள்ளி நகையாடினாரோ, அந்த பப்பு எதிர்க்கட்சித் தலைவராக நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை ஆளும் கட்சியை திக்கு முக்காட வைத்துள்ளது!

**காங்கிரஸ் இல்லாத பாரதம்**

**கழகங்கள் இல்லாத தமிழகம்**

**உருவாக்கிடுவோம் என்று சூளுரைத்த பா.ஜ.க. கூட்டத்தின் இடுப்பெலும்பை முறித்துக் காட்டியுள்ளது நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள்!**



கடந்த இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களிலும், எதிர்க்கட்சி அந்தஸ்தை பெற்றிடத் தேவையான 55 இடங்களுக்குக் குறைவான இடங்களையே பெற்றிருந்த காங்கிரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்தை தர மறுத்தது பி.ஜே.பி. அரசு!

2024 தேர்தலுக்கான பிரச்சாரக் கூட்டங்களில் பேசிய மோடி, தேர்தல் முடிவுக்குப்பின் காங்கிரஸ் எதிர்க்கட்சியாகக் கூட வர முடியாது என்றார். ஆனால் நிலைமை தலைகீழானது. காங்கிரஸ் தனித்தே 99 இடங்களில் வென்றது! எதிர்க்கட்சித் தலைவராக ராகுல்காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மோடியின் கனவு பொடிப் பொடியானது. அகங்காரம், ஆணவம் எல்லாம் தூள் தூளானது! கழகங்கள் இல்லாத தமிழ்நாட்டைக் கனவு கண்டார்கள்; ஆனால் பி.ஜே.பி.யில்லாத தமிழ்நாட்டை தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் உருவாக்கி மோடி கூட்டத்தின் முகத்தில் கரி பூசினர்! இந்த நிலையில்தான் 'குப்புற வீழ்ந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' - என்பது போல ஒருவித 'டம்ப'ப் பேச்சை நாடாளுமன்றத்தில் பேசியுள்ளார் பிரதமர்!

**ஒரு தேர்ந்த போர்வீரன் தனது அம்புரா தூணியிலிருந்து அடுக்கடுக்காய் அம்புகளை எடுத்து எதிரியின் மீது பாய்ச்சி எதிரியை சல்லடைக் கண்களாகத் துளைப்பது போல, எதிர்க்கட்சித் தலைவர் ஆளும்கட்சி தலைமை பீடத்தில் அமர்ந்துள்ளவர்கள் மீது குறிப்பாக பிரதமர் மோடியின் மீது குற்றச்சாட்டுகளை எய்து துளைத்தெடுத்தார்.**

பின்னர் பதிலுரை வழங்கிய பிரதமர் பேச்சில், அவையில் குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்தில் பங்கேற்ற மற்ற கட்சித் தலைவர்கள் ஆற்றிய உரைகளுக்கான பதில் இல்லாமல் ஒட்டுமொத்தமாக ராகுல் காந்தியின் உரைக்கான பதிலாகவே இருந்தது; கொதிக்கும் எண்ணெயில் போட்ட கடுகு போல பல நேரங்களில் வெடித்தார்! ராகுல் காந்தி பேசிய பேச்சுக்கு நேரடியாகப் பதில் கூற முடியாது, அவரது பேச்சை திரித்து அவர் பேசாத ஒன்றை பேசியதாக திணித்து ஆவேசமாக அதற்குப் பதில் கூறினார்!

**“இது அஹிம்சை தேசம்; சிவன் காண்பிப்பது அபயமுத்ரா. அபய முத்ரா என்பது அச்சமின்மை, உறுதி, பாதுகாப்பு இவற்றினை குறிப்பது இந்திய மதங்கள் தெய்வீக பாதுகாப்பைக் கூறுகின்றன. ஆனால் தங்களை இந்து என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் சிலர் வன்முறை, வெறுப்பு, உண்மைக்கு மாறான பேச்சு- இவற்றைமட்டுமே கூறி வருகின்றனர்” என்று இந்து சமூகத்தின் பெயரால் சிலர் நடத்திடும் நயவஞ்சக நாடகங்களை விளக்கினார்.**

அப்போது பிரதமர் மோடி ராகுலின் பேச்சில் குறுக்கிட்டு, தனது வழக்கமான திரித்தல் வேலையை செய்து பார்த்தார்.

“இது முழுக்க முழுக்க இந்து சமூகத்தின் மீதான தாக்குதல்...” என ராகுலின் பேச்சுக்கு 'இந்து எதிர்ப்பு வண்ணம்' பூசிட எண்ணினார்!



அமித்ஷா தன் பங்கிற்கு இந்துக்கள் அனைவரும் வன்முறையாளர்கள் என்று ராகுல் கருதுகிறாரா? என்று கேட்டார்!

இத்தகைய திசை திருப்புதலால் ராகுல் காந்தி திக்குமுக்காடித் திணறிடுவார் என்று கருதிய பிரதமர் மோடியையும், அமைச்சர் அமித்ஷாவையும் - ராகுலின் பதிலடி பதுங்கிட வைத்தது.

**“பா.ஜ.க.வும் அதன் பிற அமைப்புகளும், பிரதமர் மோடியும் முழு இந்து சமுதாயத்தின் பிரதிநிதிகள் அல்ல என்பதை பிரதமருக்கு நினைவுபடுத்துகிறேன்...”**

**எனக் கூறி ஒட்டுமொத்த இந்து சமுதாயத்தின் ஏகபோக பிரதிநிதிகள் தாங்கள்தான் என்பது போல நாடகம் போட்டுக் கொண்டிருந்தவர்கள் முகத்திரையை கிழித்து நார் நாராகத் தொங்கவிட்டார் ராகுல்!**



**சிலந்தி**

அரசியலில் திரித்தல் வேலை செய்வதில் வல்லவர்கள் மோடியும் அவரது கூட்டத்தினரும். இப்படித்தான் தேர்தலுக்கு முன் பல திரித்தல் வேலைகளைத் தொடர்ந்து செய்து வந்தார் பிரதமர் மோடி!

மும்பையில் இந்திய ஒற்றுமை கூட்ட நிறைவு நாளில் பேசிய ராகுல் காந்தி, “பிரதமர் மோடிக்கு எதிரான போராட்டம் தனிப்பட்ட அளவிலானது அல்ல; மோடி ஒரு சக்தி (அதிகாரம் படைத்தவர்) இந்து மதத்தின் தர்மத்தில் சக்தி (வலிமை) என்ற வார்த்தை உள்ளது. நாங்கள் ஒரு சக்திக்கு (அதிகாரம்) எதிராகப் போராடுகிறோம்” என்று குறிப்பிட்டார். அதனை உடனே மோடி திரித்து, தான் தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்ற இடமெல்லாம், இந்துக்கடவுள் சக்தியை ராகுல் காந்தி அவமானப்படுத்திவிட்டார் என்று பேசினார். அதேபோல கருநாடக மாநிலத் தேர்தல் பிரச்சாரத்தின் போது, அந்த மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஒருவர் 'பஜ்ரங்தள்' என்ற அமைப்பை தடைசெய்ய வேண்டும் என்று பேசியதை திரித்து, பஜ்ரங்கி என்றால் ஹனுமான், ஹனுமான் பிறந்து வளர்ந்த மாநிலம் கருநாடகா! அந்த ஹனுமானைத் தடை செய்யச் சொல்பவர்கள் இந்து விரோதிகள் என்று பேசியதும் இதே 'திரிப்புத் திலகம்' மோடிதான்!

தமிழ்நாட்டில் மக்களை பிறப்பால் மேலானவன், தாழ்ந்தவன், கீழானவன் என்று கூறும் சனாதன கோட்பாடுகள் கொடுமையானது என்று கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி பேசியதை - இந்து மதத்துக்கு விரோதமாகப் பேசுகிறார் எனத் திரித்துக் கூறி, இந்துமத வெறியர்களைத் தூண்டி அவர்கள் உதயநிதியின் தலைக்கு விலை வைத்துப் பேசிய காட்சிகளையெல்லாம் நாடு கண்டுள்ளது.

பிரதமர் நாடாளுமன்றத்தில் அன்று ஆற்றிய பதிலுரையில் பொறுப்புத் தெரியவில்லை, வெறுப்பு விதைக்கப்பட்டது. உண்மைக்குப் புறம்பான பல தகவல்களைக் கூறினார்! வெறுப்பின் உச்சக்கட்டத்தில் நின்று மோடி ஆற்றிய உரையில் அவர் ராகுல் மீது உள்ள தனது மன எரிச்சலை அவரது பெயரைக் குறிப்பிடாமலேயே நெருப்பாகக் கொட்டினார்.

தனது ஆட்சியே கூட்டணி கட்சிகளின் தயவில் இருப்பதை மறந்தோ மறைத்தோ காங்கிரஸ் கட்சி கூட்டணி கட்சிகளின் வாக்குகளை ஒட்டுண்ணியாகப் பெற்றுள்ளது என்றார்!

**ஆந்திராவில், பீகாரில் பி.ஜே.பி. பெற்ற வெற்றி ஒட்டுண்ணி வெற்றி என்பதை எல்லாம் மறந்து தன்நிலை இழந்த தடுமாற்றத்தினைப் பிரதமர் மோடியின் பேச்சில் அன்று பலரும் கண்டிருக்கலாம். முன்னுக்குப் பின் முரண், ஒன்றுக்கு ஒன்று சம்மந்தமில்லாத பேச்சை பிரதமர் பேசியதிலிருந்தே, பிரதமர் எதிர்க்கட்சியின் பலத்தைக் கண்டு பயந்து தடுமாறியதைக் காட்டியது!**

பிரதமர் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து எழுப்பப்பட்ட எதிர்ப்பு கோஷங்களிடையே பேசியபோது, எதிர்க்கட்சித் தலைவர், அமைதியாக பிரதமர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த காட்சியில் பல பொருள்கள் பொதிந்திருந்தன!

'பப்பு' என்றீர்களே இப்போது அந்த பப்பு எப்படி பதற வைத்துள்ளது பார்த்தீர்களா? - என சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தார் ராகுல்! ●